**அ.வ.எண். 92/2023**
**வா.சா.1 : மோனிஸ்குமார்**
**தேதி : 08.01.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

2008 ஆம் ஆண்டு இவ்வழக்கில் கடன் வழங்கப்பட்ட சமயத்தில் நான் வங்கியில் மேலாளராக பணிசெய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். ஆவணங்கள் அனைத்தும் முதலில் நிரப்பிய பிறகு தான் கையொப்பம் பெறுவார்கள். அனைத்து நேரங்களில் ஆவணங்களை முழுமையான பூர்த்தி செய்த பிறகு தான் கையொப்பம் பெறுவார்கள். எனக்கு நேரடியாக இந்த வழக்கில் ஆவணங்கள் பூர்த்தி செய்து கையொப்பம் பெற்றார்களா அல்லது கையெழுத்து பெற்ற பிறகு பூர்த்தி செய்தார்களா என்று எனக்கு தெரியாது. **வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் புகைப்படத்திற்கு மேலாக உள்ள குறிப்பு இது தான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த குறிப்பு கடன் பெறுவதற்காக கொடுத்த விண்ணப்பத்திற்கான அந்த ஆண்டிற்கான குறிப்பு என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்திலும் முத்திரைக்கு மேல் குறிப்பு உள்ளது. அது அந்த ஆண்டிற்கான ஆவணம் என்று சொன்னால் சரிதான். உங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி நல்ல வருமானம் ஈட்டுபவர் என்று கூறியுள்ளீர்கள் என்பதற்கு எதனடிப்படையில் அவ்வாறு கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் 1ம் பிரதிவாதி ஏற்கனவே சேலத்தில் உள்ள வங்கியில் நகைக்கடன் வாங்கி அதை திருப்பி செலுத்தியுள்ளார் என்பதால் அவ்வாறு சொல்லியுள்ளோம். 1ம் பிரதிவாதி எந்தவொரு வேலைக்கும் செல்லாமல் வீட்டில் தான் இருப்பதால் அவருக்கு எந்த வருமானமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3

ஆவணம் கடனை நீட்டிப்பதற்காக பிரதிவாதிகள் கொடுத்த ஆவணம் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வங்கியில் உள்ளவர் தான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்த பிறகு வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தவர்களை விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. பொதுவாக வங்கியின் ஊழியர் சாட்சியாக கையொப்பம் செய்யும்போது அவருடைய பணியாளர் எண் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான் ஆனால் அனைத்து ஆவணங்களிலும் அவ்வாறு பணியாளர் எண் குறிப்பிடுவதில்லை. வா.சா.ஆ.5 ல் NF 760/2L(50)09–2018/Keerthika என்பது 2018 க்கு உரிய ஆவணம் என்று சொன்னால் 2018 ஆம் ஆண்டு வந்த ஆவணத்திற்கு குறிப்பெண். வா.சா.ஆ.5 ஆவணத்தில் யார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் யார் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணம் 2018 ஆம் ஆண்டே பிரதிவாதியிடம் பூர்த்தி செய்யப்படாத ஆவணத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டு அதில் நீங்கள் பின்னிட்டு பூர்த்தி செய்து கொண்டுள்ளீர்கள் என்றும் ஆகையால் தான் அந்த ஆவணத்தில் NF 760/2L(50)09–2018/Keerthika என்று குறிப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2020 ஆம் ஆண்டு கொரானா காலகட்டம் என்பதால் பிரதிவாதி வங்கியில் வந்து வா.சா.ஆ.5 ஆவணத்தை கையொப்பம் செய்யவில்லை என்றும் நீங்கள் ஏற்கனவே பிரதிவாதியின் கையொப்பத்தை பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பத்தை பூர்த்தி செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் தான் யார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்பதற்கான பணியாளர் எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி கடனுக்கான பகுதி தொகையை 15.07.2019 தேதியன்று செலுத்தியுள்ளார் என்றும் பின்னிட்டு இந்த வழக்கு 2023 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது ஆகையால் இந்த வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.08 17:58:56 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.